28th March 1958]

SRI V. S. MANICKASUNDARAM : 444-வது கேள்வியில், செந்தக் கோட்டை, பட்டுக்கோட்டை தாலூகாக்களில் உள்ள பஞ்சாயத்துப் போர்டுகளில் இருந்து புறம்போக்கு நிலங்களை தங்களுக்கு பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டிருப்பது விவசாய சம்பந்தமாகவா அல்லது வேறு விஷயமாகவா என்று கேட்க விரும்புகிறேன். அப்படியிருந்தால் விவசாய சம்பந்தமாக இல்லாத புறம்போக்குகளைப்பற்றி சப்ளிமெண்ட்டரிஸ் கேட்பதில் என்ன தவறு இருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது, உப்புச் சாகுபடிக்கு என்று நினைக்கிறேன்.

SRI M. K. SOMASUNDARAM : சில இடங்களில் சர்க்கார் புறம்போக்கு நிலங்களை மிராசுதார்கள் ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு சர்க்காரிலிருந்து ஜாரி செய்து கொடுப்பதற்கு முன்பு பத்திரம் எழுதிக்கொடுத்து மற்றவர்களுக்கு விற்று விடுகிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால் எந்தெந்த இடங்களில் அப்படி செய்யப்படுகிறது என்று பார்த்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் எழுதி தகவல் கொடுத்தால் என்ன என்று விசாரிக்கிறேன்.

SRI K. B. S. MANI : சர்க்கார் பி மெம்மோ இஷ்யூ செய்து கொடுப்பதற்கு, ஒரு விவசாயி முறைப்படி ஆக்கிரமித்திருந்தால் தாசில்தார், கர்ணம் தான் பி. மெம்மோ கொடுத்து தண்டத் தீர்வை விதிக்கிறார்கள். ஐந்தாறு வருஷங்களாக தண்டத் தீர்வை விதித்து 150 ரூபாய் வரை தீர்வை கட்டி நிலத்தை பண்படுத்தி சாகுபடிக்கு கொண்டு வந்த பிறகு இந்த வருஷம் அதிகப்படியான நிலம் தஞ்சாவூரில் மறுபடியும் விட்டுவிடவேண்டுமென்று முடிவிற்கு வரப்பட்டிருக்கிறது. ஆகவே ஐந்தாறு வருஷம் தண்டத் தீர்வை கட்டி புறம்போக்கை ஆர்ஜிதம் செய்து கொண்டவர்களுக்கு அடமானம் செய்து கொடுக்க சர்க்கார் உத்தரவு பிறப்பிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது அரசாங்கத்தின் கொள்கை இம்மாதிரி ஆக்கிரமித்து இருப்பவர்களுக்கு தொடர்ந்து பயிர் செய்கிற, [சிவாஜ்மா என்பது] இவர்களுக்குத்தான் முதலில் கொடுக்கப்படுகிறது. பிறகு தான் மற்றவர்களின் உரிமை கவனிக்கப்படுகிறது.

SRI V. K. KOTHANDARAMAN : பத்துப் பதினைந்து ஏக்கர்களுக்கு மேல் நிலம் உள்ளவர்களுக்கு தரிசு நிலங்கள் பட்டா செய்யப்பட்டிருக்கிறதா ? அதை எடுத்து நிலம் இல்லாத ஏழை விவசாயிக்கு வாங்கிக் கொடுக்கப்படுமா ?

The HON. SRI M. A. MANICKAVELU : அது ஏற்கெனவே அந்தக் காலத்தில் செய்யப்பட்டது. அதை ஆங்கிலத்தில் " ரெஸ்ஜுடிகேட்டா " என்பார்கள். கோர்ட்டில் கூட ஒன்றும் செய்ய முடியாது.

Books in Tamil on scientific and technical subjects

* 447 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to translate books on scientific and technical subjects into Tamil?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI A. A. RASHEED : It is not a fact that there is a paucity of Tamil Text Books on technical subjects? Will the Government come forward to award cash prize for the best translation in Tamil?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I don't think that the translation will serve the purpose. The idea is to prepare some

original text books, of course, with the help of the existing text books in English for the purpose of use at the College level. For that we have appointed a Committee and they are going into this matter.

SRI A. VEDARATHNAM : இதுவரையில் விஞ்ஞான தொழில் நுட்ப நூல்கள் தமிழில் ஏதேனும் வந்திருக்கிறதா ? வந்திருக்கிறது என்றால் மேலும் இவ்வித நூல்கள் வெளிவருவதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா ?

THE HON. SRI C, SUBRAMANIAM : பல நூல்கள் வந்திருக்கின்றன. இன்னும் பல நூல்கள் வருவதற்காகத்தான் ஒரு பரிசு திட்டம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக அமுல் நடத்தப்பட்டு வருகிறது. புத்தகத்தை எழுதி பிரசுரிக்க முடியாதவர்கள் கையெழுத்து பிரதியை கொடுத்தாலும் அதற்கும் பரிசு கொடுக்கும்படி திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

SRI M. P. SARATHI : மொழி பெயர்ப்பு விஷயமாக தமிழ் அறிஞர்களை கலந்து கொண்டுதான் இந்த முடிவுக்கு சர்க்கார் வந்ததா அல்லது சர்க்காரே இந்த முடிவுக்கு வந்ததா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிற அறிஞர்கள் என்பது திராவிட முன்னேற்ற கழகத்திலுள்ள அறிஞர்களை குறிப்பிடுகிறார்களா அல்லது வேறு அறிஞர்களை குறிப்பிடுகிறார்களா என்று தெரியவில்லை. (சிரிப்பு.) யார் அறிஞர்கள் யார் அறிஞர்கள் இல்லை என்று இதில் சொல்ல முடியாது. பலரை கலந்து ஆலோசித்த பிறகுதான் இந்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

SRI S. LAZAR : ஸார், ஏற்கனவே ஸைன்டிபிக், டெக்னிக்கல் விஷயங்களில் தமிழில் சில நூல்கள் இருக்கிற என்பது உண்மை. ஆனால் ஸைன்டிபிக் வார்த்தைகளையும் டெக்னிக்கல் வார்த்தைகளையும் தமிழில் மொழி பெயர்க்கும்பொழுது ஒவ்வொருவரும் ஒவ்வொரு வார்த்தையை உடயோகப்படுத்துகிறார்கள். இதனால் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மிக கஷ்டமாய் இருக்கிறது. ஆகவே இதை போக்குவதற்கு கன்ஸாலிடேட் செய்த பதங்களை எல்லோரும் உபயோகிக்கும் வகையில் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த ஸைன்டிபிக் அண்ட் டெக்னிக்கல் வார்த்தைகளை பொறுத்தவரையில் என்னுடைய அபிப்பிராயம், பொதுவாக உலகத்தில் வழங்கக்கூடிய பதங்களையே வைத்திருப்பது நல்லது என்பது. அதன் மூலமாக தமிழ் விஞ்ஞானங்களை சுலபமாக அறிந்து கொள்ளமுடியும். அதன் மூலம் விஞ்ஞான புஸ்தகங்களை அறிந்துகொள்ள மாணவர்களை தயார் செய்துகொள்ள முடியும். ஆகையினால் தமிழில் இதற்கு என்று தனியாக பதங்களை ஏற்படுத்தாமல் எல்லா ஸைன்டிபிக் அண்ட் டெக்னிக்கல் டெர்ம்ஸ்களையும் சேர்த்து **international terminology** என்று சொல்லுவார்களே அந்த அடிப்படையில் ஏற்றுக்கொள்வது என்பதுதான் நல்லது என்று நான் அபிப்பிராயப் படுகிறேன்.

Pennar river water-supply

* 448 *Q.*—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Villupuram and Cuddalore taluks of South Arcot district are affected by drought;

(*b*) whether the standing crops in these taluks have more or less withered away due to the non-supply of water from the Pennar river ; and

(*c*) if so, whether the Government propose to give land revenue remission to the agriculturists of these two taluks?